ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 81 — 1973 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා — 1973.10.12

81 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 12 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1095 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1102 | ஏலவிற்பனைகள் | — |
| ஆவவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | 1103 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கைக் கடற்படைக் கேள்விப் பத்திரங்கள்

சட்டைகள் தைப்பதற்கான வெண்ணிற, நீல ட்றில் துணிகள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி காலை 10.00 மணிவரை கொழும்பு—1 இல் உள்ள இலங்கைக் கடற்படைக் கேள்விச்சபை தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. முழு விபரங்களும் கேள்விப்பத்திரப் படிவங்களும் கொழும்பு—1, கொடிமர வீதியில் உள்ள இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகத்திலுள்ள கடற்படைத் தளபதியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

டி. பீ. குணசேகர,
கொமடோர்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. இல. 593,
கொழும்பு—1.

10–402—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

#### தியணைப்புச் சாதனங்களை வழங்கல்

தியணைப்புச் சாதனங்களை வழங்கிக்கொள்வதற்கான பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச்சபைத்தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். விபரக்கூற்றுக்களையும் கேள்வி நிபந்தனைகளையும், மீளளிக்கப்படும் காசுவைப்பாக ரூபா 100 கொடுத்து, பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 1973 ஒக்ரோபர் 30 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

10–389—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### தொல்பொருட்கலைத் திணைக்களம்

சி. வி. 1709 "மொறிஸ் கொமர்" லொறி விற்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

சி. வி. 1709 இலக்கமுள்ள "மொறிஸ் கொமர்" லொறியை விற்பதற்கான கேள்விப்பத்திரங்கள், சேர் மார்க்கஸ் பெர்னன்டோ ரோடு, கொழும்பு 7 ல் இருக்கும் தொல்பொருட்கலை ஆணையாளர் அவர்களால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களும் மற்றைய விபரங்களும் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து 27.10.73 நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்கள் 29.10.1973 ம் திகதியன்று பிற்பகல் 3.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

31.10.1973 ம் திகதியன்று காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள், கேள்விப் பத்திர சபை ஒன்றினால் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படும். இந்நேரத்தில் பிரசன்னமாக இருக்கும்படி எல்லா கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களும் வேண்டப்படுகின்றனர்.

கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூ. 200/-.

ராஜா த சில்வா,
தொல்பொருட்கலை ஆணையாளர்.

தொல்பொருட்கலைத் திணைக்களம்,
கொழும்பு 7,
2.10.1973

10–329—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

### கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. மதவுகள் கட்டும் வேலை—வன்னிவிழாங்குளம் கிராம விஸ்தரிப்புத் திட்டம்.
2. மதவுகள் கட்டும்வேலை—"ஈ—எவ்" ரேட்—மடு முந்திரிகை செய்கைத் திட்டம்.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப் பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக் களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவை. கேள்விப் பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்ட வேண்டியதில்லை.

3. கேள்விப் பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1973 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23 ம் திகதி (23.10.73) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப் பத்திர மேலுறையும் "மதவுகள் கட்டடவேலை—வன்னிவிளாங் குளம்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட கால வெல்லையின் பின்னர் கிடைக்கப் பெற்ற கேள்விப் பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப் பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1973 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 23 ம் திகதி (23.10.73) பிற்பகல் 12.05 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையைக் கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழு வேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி மன்னார்,
1973 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 ந் திகதி.

0–263—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

குறிப்பு இல. எல். டி./01-11.

### காணிக் கொமிஷனர் இலாகா

இரத்தினபுரி மாவட்டத்தில் கீழ் குறிப்பிடும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு, தபாற் பெட்டி இல. 500, காணிக் கொமிஷனர் இலாகா கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | வேண்டிய பதிவுத் தொகை |
|---|---|
| | ரூபா |
| போவெத்த தெகந்த முகலான நீர்விநியோகத் திட்டம் | 35,000 |

2. கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள், 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை மேற்கூறப்பட்ட தொகைகளுக்கு அரசாங்க இலாகாக்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

3. கேள்விக்காரர்கள் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 100 வைப்புப் பணமாக இரத்தினபுரிக் கச்சேரியில் அல்லது வேறு கச்சேரியில் அல்லது கொழும்பு பொதுத் திறைசேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

4. மேற்கூறிய தொகைகளுக்கு நீர்ப்பாசன, பகிரங்க வேலை, கல்வி இலாகாக்களில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள், பலநோக்குச் சமாசங்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை. பதிவு செய்யப்பட்டதற்கான பதிவை சமர்ப்பித்த பின்னரே கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் உறையில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர், விலாசம் ஆகியவைகளும் குறிப்பிட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரம் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அதைக் கேள்விக்காரர் தாமாகவே கொழும்பு, காலி முகப்பு செக்ரிட்டேரியட் கட்டிடத்தில் 3 ம் மாடியின் 320 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்கூறப்பட்ட 320 ம் இலக்க அறையில் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை இரத்தினபுரி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். வீ. மாணிக்கவாசகர்,
மேலதிக அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, இரத்தினபுரி,
1973 ம் ஆண்டு ஒக்தோபர் மீ 1 ந் உ.

10–398—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

**கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல்—காணி ஆணையாளர் திணைக்களம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலை செய்வதற்காக 1973.11.09 ம் திகதி பிற்பகல் 1.00 மணிவரை கொழும்பு த. பெ. இல. 500 காணிக்கமிஷனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபையின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

| வேலை விபரம் | பதிவுத்தொகை தேவைப்படும் ரூபா |
|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவுக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கலவாரை கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் பாதை அமைத்தல். | 21,000,00 |

2. மேற்குறிப்பிட்ட தொகைக்கோ, அல்லது அதிற்கூடிய தொகைக்கோ நெடுஞ்சாலைப்பகுதி, நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள். கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவற்றுக்கும் இக் கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரி காணிக் கிளையிலிருந்து 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ம் திகதி பிற்பகல் 1.30 மணிவரை வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது ஒப்பந்த பதிவு பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்தபின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப் பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மேற் கூறப்பட்ட சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் தலைவர், கேள்விச்சபை காணி ஆணையாளர் அலுவலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப் பெற்ற தபால் உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் கொழும்பிலுள்ள செயலகத்திலுள்ள 320 ம் இலக்க அறையில் இதற்தென வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்ட பின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்துத் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்துப் பத்து நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தாவிடின், செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிச் கொடுக்கப்படமாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், ஒப்பந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத்தலத்துக்கு அருகாமையில் இருப்பவர்களாயும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப் பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறிய விரும்பின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெறறுக் கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தகாரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. காணித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் எவ்வித கேள்விகளுக்கும் இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரகாரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருக்க திறந்திருக்கப்படும்.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக் கிளை,
செயலகம், யாழ்ப்பாணம்,
1973.10.01.

10—344—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81

---

## சுகாதாரத் திணைக்களம்

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்வரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும். அத்துடன் தங்களிடம் கொந்தராத்து கொண்டு நடத்துவதற்கு ஏற்ற முதலும் சேவையாளர்களும் இருப்பது என்பதையிட்டுக் காரியாதிகாரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அத்தாட்சிப்பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் :—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள், அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறின் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கநேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையில் ஆறுவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய் விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய் அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பி " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சி " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **அரிசி.**—நோயாளிகளாலும், வேலையாட்களினாலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப் பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத் தலைவரால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்,
1973 ம் ஆடு செப்டம்பர் மீ 28 ந் ஷ.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

குறித்த அட்டவணை

| 1 | 2 | 3 | 4 | 5 | | | | | | | | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | | |
| | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விக் காலம் | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | | கேள்விகள் மூடப்படும் திகதி |
| தாபனங்கள் | ரூபா | ரூபா | | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | |
| 1. நெடுந்தீவு மா. வை. .. | 100 | 800 | 1. 1.74— 31.12.74 | 600 | 300 | 300 | 1,200 | 1,100 | 500 | 500 | 1,500 | 29.10.73 |
| 2. புங்குடுதிவு மா. வை. .. | 100 | 600 | ஷை | 1,100 | 2,100 | 1,000 | 2,800 | 1,500 | 3,000 | 1,500 | 4,000 | |
| 3. அக்கராயன்குளம் ப. வை. .. | 100 | 600 | ஷை | 750 | 1,400 | 750 | 1,900 | 850 | 1,500 | 850 | 2,500 | |
| 4. அனலைதீவு ப. வை. .. | 100 | 600 | ஷை | 800 | — | 300 | 1,400 | 600 | — | 600 | 100 | |
| 5. சங்கானை ப. வை. .. | 100 | 600 | ஷை | 250 | 400 | 250 | 700 | 1,100 | 2,100 | 1,100 | 3,100 | |
| 6. கோப்பாய் ப. வை. .. | 100 | 600 | ஷை | 300 | 600 | 300 | 1,000 | 1,000 | 1,700 | 700 | 2,000 | |
| 7. மல்லாவி ப. வை. .. | 100 | 600 | ஷை | 400 | 900 | 400 | 1,500 | 500 | 1,100 | 600 | 2,000 | |
| 8. நயினாதீவு ப. வை. .. | 100 | 600 | ஷை | 600 | 800 | 700 | 1,000 | 2,500 | 1,500 | 1,200 | 2,400 | |
| 9. பளை ப. வை. .. | 100 | 600 | ஷை | 250 | 450 | 250 | 700 | 600 | 1,000 | 600 | 2,200 | |
| 10. பூனகரி ப. வை. .. | 100 | 600 | ஷை | 300 | 500 | 250 | 750 | 1,000 | 1,500 | 700 | 2,500 | |
| 11. அச்சுவேலி கி. வை. .. | 100 | 600 | ஷை | 300 | 650 | 300 | 900 | 700 | 1,500 | 700 | 2,500 | |
| 12. செம்பியன்பற்று கி. வை. .. | 100 | 600 | ஷை | 750 | 1,500 | 750 | 2,000 | 700 | 1,500 | 700 | 2,500 | |
| 13. பண்டதரிப்பு கி. வை. .. | 100 | 600 | ஷை | 300 | 700 | 300 | 1,000 | 500 | 1,500 | 500 | 2,000 | |
| 14. வட்டுக்கோட்டை கி. வை. .. | 100 | 600 | ஷை | 500 | 800 | 500 | 900 | 1,000 | 1,900 | 1,000 | 3,000 | |
| 15. காரைநகர் கி. வை. .. | 100 | 600 | ஷை | 150 | 300 | 100 | 600 | 100 | 200 | 100 | 500 | |

10–285—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

## சுகாதாரத் திணைக்களம்

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விப் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும். அத்துடன் தங்களிடம் கொந்தராத்துக் கொண்டு நடத்துவதற்கு ஏற்ற முதலும் சேவையாளர்களும் இருப்பது என்பதையிட்டு காரியாதிகாரியிடமிருந்து இடைக்கப்பெற்ற அத்தாட்சிப்பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்:—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள், அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, புத்தளம்,இரத்தினபுரி, வவுனியா, குருநாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிருபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கநேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையில் ஆருவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரார்கள் சமூகமாயிருக்கலாம். சமூகாயிருக்கும் கேள்விக்காரார்களுக்கு கேள்விக்காரார்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய் விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள்பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பி " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செல்வுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரார்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சி " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருள்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரார்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரார்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரார்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரார்கள் கவனிக்க வேண்டும்.

10. **அரிசி.**—நோயாளிகளானும், வேலையாட்களினனும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவி பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலயத் தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 28 ந் வ.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

## குறித்த அட்டவணை

| | 1 | 2 | 3 | 4 | 5 | | | | | | | | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விக் காலம் | உணவுகள் அண்ணளவான தொகைகள். | | | | | | | | கேள்விகள் மூடப்படும் திகதி |
| | | | | | வேலைக்காரார்கள் | | | | நோயாளிகள் | | | | |
| | | | | 1. 1.74 | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | |
| 1. | அளவெட்டி, பி.வி. | 100 | 300 | 31.12.74 | 100 | 200 | 100 | 300* | 25 | 50 | 25 | 100 | 6.11.73 |
| 2. | அம்பன், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 200 | 400 | 200 | 600 | 400 | 600 | 400 | 1,200 | |
| 3. | தருமபுரம், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 150 | 300 | 150 | 600 | 300 | 500 | 300 | 1,500 | |
| 4. | கரவெட்டி, பி.வி. | 100 | 300 | 31.12.74 | 100 | 150 | 100 | 300 | 50 | 50 | 50 | 100 | |
| 5. | குருநகர், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 100 | 150 | 100 | 300 | 50 | 50 | 50 | 100 | |
| 6. | கொடிகாமம், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 200 | 350 | 200 | 600 | 100 | 200 | 100 | 400 | |
| 7. | மண்டைதீவு, பி.வி. | 100 | 300 | 31.12.74 | 120 | 200 | 120 | 360 | 150 | 300 | 100 | 500 | |
| 8. | மானிப்பாய், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 200 | 300 | 150 | 300 | 50 | 100 | 50 | 200 | |
| 9. | உருத்திரபுரம், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 100 | 150 | 100 | 200 | 50 | 75 | 50 | 100 | |
| 10. | வறனி, பி.வி. | 100 | 300 | 31.12.74 | 100 | 200 | 100 | 300 | 50 | 100 | 50 | 200 | |
| 11. | வேலணை, பி.வி. | 100 | 300 | 31.12.74 | 150 | 200 | 150 | 300 | 50 | 100 | 50 | 300 | |
| 12. | வேராவில், பி.வி. | 100 | 300 | 31.12.74 | 150 | 200 | 150 | 300 | 100 | 200 | 100 | 40 | |

கேள்விக்காலம் 1.1.74 தொடக்கம் (31.12,74) 31.12.74 வரையும்.

10–286—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

## ஸ்ரீ லங்கா கடற்படை

### துணிகள் சலவை செய்வதற்கான கேள்விகள்—1974

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் கோலவுடை, படைவீடு, ஆஸ்பத்திரிக்கான துணிகள் சலவை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொரு சேவைக்கெதிரே காட்டப்பட்டுள்ள திகதிகளில் காலை 10.00 மணிவரை கொழும்பு 1, த. பெ. இல. 593, பிளாக்ஸ்ரவ் வீதி, ஸ்ரீ லங்கா கடற்படை, கடற்படை தலைமை அலுவலகத்தில், கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| I<br>சேவை | II<br>கேள்விப் பத்திரங்கள் வழங்கும் கடைசித் திகதி | III<br>கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் திகதி | IV<br>கேள்விப் பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும் திகதி |
|---|---|---|---|
| (அ) கொழும்பில் துணிகள் சலவை செய்தல் | 26.10.73 பகல் 12.00 | 30.10.73 காலை 10.00 | 30.10.73 காலை 10.30 |
| (ஆ) வெலிசறையில் துணிகள் சலவை செய்தல் | 26.10.73 பகல் 12.00 | 30.10.73 காலை 10.00 | 30.10.73 காலை 10.30 |
| (இ) திருகோணமலையில் துணிகள் சலவை செய்தல் | 26.10.73 பகல் 12.00 | 30.10.73 காலை 10.00 | 30.10.73 காலை 10.30 |
| (ஈ) காரைநகரில் துணிகள் சலவை செய்தல் | 29.10.73 பகல் 12.00 | 31.10.73 காலை 10.00 | 31.10.73 காலை 10.30 |
| (உ) தங்கல்லவில் துணிகள் சலவை செய்தல் | 29.10.73 பகல் 12.00 | 31.10.73 காலை 10.00 | 31.10.73 காலை 10.30 |
| (ஊ) கல்பிட்டியில் துணிகள் சலவை செய்தல் | 29.10.73 பகல் 12.00 | 31.10.73 காலை 10.00 | 31.10.73 காலை 10.30 |
| (எ) லக்சபானவில் துணிகள் சலவை செய்தல் | 29.10.73 பகல் 12.00 | 31.10.73 காலை 10.00 | 31.10.73 காலை 10.30 |

விண்ணப்பகாரரின் புண உறுதிநிலையைப் பற்றிய முழு விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படும் மனுவின் பெயரில், மேற்கூறப்பட்ட சேவைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள், ஒவ்வொரு சேவைக்கெதிரே I ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள திகதிகளில் பகல் 12.00 மணிவரை கொழும்பு 1, பிளாக்ஸ்ரவ் வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா கடற்படைத் தலைமை அலுவலகக் கடற்படைத் தளபதியால் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் திரும்பப் பெறக்கூடிய ரூபா 75/– வீதம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காசுக்கட்டளைகள் கடற்படைத் தளபதியின் பெயரில் எழுதப்படல் வேண்டும்.

கேள்வியாளர் கேள்விப் பத்திரங்கள் கோரும்போது, தங்கள் முழுப் பெயர்களையும், முகவரிகளையும் கொடுத்தல் வேண்டும். கேட்கப்பட்டால் அவர்கள் கொந்தராத்து நடத்துவதற்குத் தங்களிடம் ஆற்றல் உண்டென்பதற்கு போதிய சான்று அளித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திர விண்ணப்பகாரர் தாங்கள் விரும்பும் சேவைகளையும், சேவை செய்வதற்கு விரும்பும் ஸ்தானங்களையும் அறிவித்தல் அவசியம்.

டி. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தளபதி,
தலைமை அலுவலகம், இலங்கை
ஸ்ரீ லங்கா கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1.

10–304—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

## அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்

### 35 மி. மீ., இயக்கப்பட கச்சா படச் சுருள்களையும், மக்னற்றிக் ஒலிப்பதிவுப் படச் சுருள்களையும் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம்

அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு 35 மி.மீ., இயக்கப்பட கச்சா படச் சுருள்களையும், மக்னற்றிக் ஒலிப்பதிவுப் படச்சுருள்களையும் விநியோகம் செய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து உற்பத்தியாளர்கள், விநியோகித்தர்கள், தத்துவம் பெற்ற முகவர்கள் ஆகியோரிடமிருந்து விலைக்குறிப்புக்கள் கோரப்படுகின்றன.

(2) கொழும்பு 7, இல. 224, பௌத்தலோக மாவத்தை, அரச திரைப்படக் கூட்டுத்தாபன முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரத்தின் பொது நிபந்தனைகள் குறித்து மேலும் விபரங்கள், அட்டவணை, கேள்விப்பத்திர படிவங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். உள்ளூர் முகவர்கள் கேள்விப்பத்திர படிவ கட்டணமாக ரூபா 25/- செலுத்த வேண்டும்.

(3) கேள்விப்பத்திர படிவங்கள் 1973 ம் ஆண்டு நவம்பர் 15 ம் திகதி பகல் 12.00 மணிவரை வழங்கப்படும். 1973 நவம்பர் 16 ந் திகதி காலை 10.30 மணிவரை பொது முகாமையாளர் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

டி. பி. நிஹால் சிங்ஹா,
பொது முகாமையாளர்.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்,
224, பௌத்தலோகா மாவத்தை,
கொழும்பு 7.

10–525/1—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

## அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்

### திரைப்படம் காட்டும் கருவிக் கார்பன்களை விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரம்

அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு திரைப்படம் காட்டும் கருவிக் கார்பன்களை விநியோகம் செய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து உற்பத்தியாளர்கள், விநியோகித்தர்கள், தத்துவம் பெற்ற முகவர்கள் ஆகியோரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

(2) கொழும்பு 7, இல. 224, பௌத்தலோக மாவத்தை, அரச திரைப்படக் கூட்டுத்தாபன முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரத்தின் பொது நிபந்தனைகள் குறித்து மேலும் விபரங்கள், கேள்விப்பத்திர படிவங்கள் அட்டவணை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(3) 1973 ம் ஆண்டு நவம்பர் 19 ம் தேதி பகல் 12 மணிவரை கேள்விப்பத்திர படிவங்கள் வழங்கப்படும். உள்ளூர் முகவர்கள் கேள்விப்பத்திர படிவ கட்டணமாக ரூபா 25/- கட்ட வேண்டும். 1973 ம் ஆண்டு நவம்பர் 20 ம் தேதி காலை 10.30 மணிவரை பொது முகாமையாளர் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

டி. பி. நிஹால் சிங்ஹா,
பொது முகாமையாளர்.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்,
224, பௌத்தலோகா மாவத்தை,
கொழும்பு 7.

10–525/2—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்

3 இல. வார்ப்பு இரும்புக்குளியல் தொட்டிகள் விற்பனைக்கு

தேவையான அணிஅடுக்குகளுடன் கூடிய 3 இல. வார்ப்பு இரும்புக் குளியல் தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. இவைகளுக்கான கூறுவிலைக் கேள்விப் பத்திரத்தை 1973 நவம்பர் 2 ம் தேதி காலை 10.30 மணிவரை இத்தால் கோரப்படுகின்றது.

2. ஒரு குளியல் தொட்டிக்கு அல்லது எல்லாவற்றுக்குமான கூறுவிலைக் கேள்விப்பத்திரத்தை அனுப்பிவைக்கலாம்.

3. அரச திரைப்படக் கூட்டுத்தாபன காரியாலய வேலை நேரத்தின் போது இப்பொருட்களை 1973 நவம்பர் 1 ம் தேதிவரை பார்வையிடலாம். பொது முகாமையாளர், அரச திரைப்படக் கூட்டுத்தாபனம், 224, பௌத்தலோகா மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரிக்கு கூறுவிலைக் கேள்விப்பத்திரத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

டி. பி. நிஹால் சிங்ஹா,
பொது முகாமையாளர்.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம்,
செப்டம்பர் 1973.

10-525/3—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81

---

சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

பசும்பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து/சுகாதார அலுவலகத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்பு பிரிவு சுகாதார சேவை அத்தியட்சர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பண பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடைந்த திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை என்க்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகுதிகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களில் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர் கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது என் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிப்பிட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் மட்டக்களப்புப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துப்பெற்றுக் கொள்ளலாம்.

வை. சிங்கநாயம்,
சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு, 1973 ம் ஆு செப்டம்பர் மீ 25 ந வ.

மேற்கூறப்பட்ட அட்டவணை

| (1) சேவை | (2) பிரிவு | (3) மாதாந்த உத்தேசத் தொகை | (4) கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|
| வாழைச்சேனை புகையிரத ஸ்தானத்திலிருந்து வாழைச்சேனை சௌக்கிய வைத்திய அதிகாரி காரியாலய மூலமாக பால் கொடுக்கும் நிலையங்கட்கு | வாழைச்சேனை | 7,161 | 13.11.73 காலை 10 மணி |
| மட்டக்களப்பு புகையிரத ஸ்தானத்திலிருந்து மட்டக்களப்பு சௌக்கிய வைத்திய அதிகாரி காரியாலய மூலமாக பால் கொடுக்கும் நிலையங்கட்கு | மட்டக்களப்பு | 4,030 | 13.11.73 காலை 10 மணி |

10-298—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.11.01 ந் திகதி காலை 10 மணி வரை அகுரஸ்சையிலுள்ள பின்தறித் தொகுதிக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 2,000 வோ அதற்கு மேற்பட்டவோ செலவாகும் கட்டிட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கட்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள், கேள்விப்படிவங்களைப் பெறுவதற்கு 1973.10.31 நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 50 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3-1 (1-67)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 1,
1973.10.1.

10—293—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

பாணந்துறை, நீர்ப்பாசன நிருமாண பிரிவின் கேள்விச்சபைத் தலைவரால் 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் 30 ம் திகதி காலை 11.00 மணி வரை, பாணந்துறை நீர்ப்பாசன நிருமாண பிரிவில் கீழ் குறிப்பிட்டுள்ள வேலைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்குறிப்பிட்ட நேரத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

2. கீழ் குறிக்கப்பட்டுள்ள தொகைக்கென, நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட கேள்வியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பயிர்க்குழுக்கள், முதலியோர் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.

3. 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆந் திகதி தொடக்கம் 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆந் திகதி வரை (இரண்டு நாட்களும் உட்பட) கந்தோர் நேரங்களில், பாணந்துறை, நீர்ப்பாசன நிருமாண பகுதி, நிருமாண பொறியியலாளர் கந்தோரில் பெற்றுக் கொள்ளமுடியும் கேள்விப் படிவங்களிலேயே, கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். கேள்விப்படிவங்கள் கோரும்பொழுது கேள்வியாளர்கள் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க தகுதியுடையவரென நிருமாணப்பொறியியலாளர் கண்டு அனுமதிக்கும் முகமாக கேள்வியாளர்கள் தங்கள் பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிப்பதுடன் தாங்கள் தற்பொழுது திணைக்களத்துடன் செய்துள்ள ஒப்பந்தங்கள் அவற்றின் பெறுமதிகள் முதலிய அடங்கிய பத்திரமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப்படிவங்கள் பெறுவதற்கு முன்பதாக கீழே குறிப்பிட்டுள்ள தொகையை, பாணந்துறை நீர்ப்பாசன நிருமாண பகுதி, நிருமாணப் பொறியியலாளர் கந்தோரில் செலுத்தியதற்கான பந்துச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

4. குறிப்பிட்ட வேலை சம்பந்தப்பட்ட வரைபடங்கள், மேலதிக விபரங்கள் முதலியவற்றை பாணந்துறை, நீர்ப்பாசன நிருமாண பகுதி, நிருமாண பொறியியலாளர் கந்தோரில் கந்தோர் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பொல்கொடைத்திட்டத்தில், பட்டிய எலிய வாய்க்காலில் 3 அடி விஸ்தீரணமுள்ள ஹியூம் பைப் மதகுகள் கட்டுதல்.

| வேலை | ஒப்பந்தக்காரரால் பதிவு செய்யப் பட்டதொகை | வைப்புப் பணத் தொகை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| பட்டிய எலிய வாய்க்காலில் நான்கு, 3 அடி. விஸ். ஹியூம் பைப் மதகுகள் கட்டுதல் | 35,000 00 உம் மேற்பட்டதும் | 50 00 |

ஆர். துரைராசா,
நிருமாணப் பொறியியலாளர்.
பாணந்துறை.

நீர்ப்பாசன நிருமாணப் பகுதி,
பாணந்துறை.

10—234—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### பொலிஸ் திணைக்களம்

#### பிரசித்த ஏல விற்பனை

பாவனைக்கு உதவாத டயர்கள், ரியூப்ஸ், மோட்டார் உதிரிப்பாகங்கள், வானொலி உதிரிப்பாகங்கள், ஒலிப்பதிவுக் கருவிகள் ஆதியவை 1973 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 31 ம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கொழும்பு-5, நாராகேன்பிட்டியில் உள்ள பொலிஸ் மத்திய காராச்சில் ஏலவிற்பனை செய்யப்படும்.

இப்பொருட்கள் 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 தொடக்கம் மாலை 3.00 மணிவரை நாராகேன்பிட்டி பொலிஸ் மத்திய காராச்சியில் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

வாங்கப்பட்ட பொருட்களுக்கு உடனடியாகக் காசு செலுத்தி ஏலவிற்பனையன்றையதினமே மாலை 3.00 மணிக்கிடையில் எடுத்துச்செல்லப்பட வேண்டும். வாங்கப்பட்டு குறித்த நேரத்தில் எடுத்துச் செல்லப்படாத பொருட்களுக்கு இத்திணைக்களம் எவ்விதத்திலும் பொறுப்பல்ல.

எம். செல்வரத்தினம்,
அத்தியட்சர்,
பொலிஸ் போக்குவரத்தும் தொடர்பும்.

பொலிஸ் போக்குவரத்து தொடர்பு அலுவலகம்,
நாராகேன்பிட்டி,
கொழும்பு-5,
17, புரட்டாதி 1973.

10—300—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### கடற்றொழில் திணைக்களம்

#### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள் வள்ளங்கள், மீன்பிடி உபகரணங்களின் ஏல விற்பனை

கீழே அட்டவணையில் வழங்கப்பட்ட தேதிகளிலும் இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் என்ஜின்கள், வள்ளங்கள், மீன்பிடி உபகரணங்கள் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. அட்டவணையில் குறிக்கப்பட்ட இடங்களில் இவற்றைப் பார்வையிடலாம்.

3. அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏல விற்பனை நடைபெறும் திகதிகளைத் தவணையிடவோ அல்லது நீக்கவோ ஏல விற்பனையை நடாத்தும் உத்தியோகத்தருக்கு உரிமையுண்டு.

4. கொடுப்பனவுகள் பணமாகப் பின்வரும் முறைப்படி செலுத்தப்படவேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக இவை ஏதேனும் விற்கப்பட்ட விலையில் ¼ பங்கு.

(ஆ) விற்கப்பட்ட விலையின் 3/4 பங்கு மூன்று நாட்களுள் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) எந்த ஒரு பொருளைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்கள்வரை ஒதுக்கிவைக்கப்படும். இந்த வகையில் என்ஜினின் விற்பனை விலையின் ¼ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலைகேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி 3/4 பங்கும், இறுதியாக ஏற்றுக்கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராகச் செலுத்தப்படவேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப்பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யின் வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

5. ஏலத்தில் விற்ற பொருள், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தும், வரை, இவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கிய வினையே சாரும்.

அட்டவணை

| வள்ள எண் | என்ஜினின் வகையும் இலக்கமும் | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| | | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, கொழும்பு | | |
| | இறஸ்ஸியன் 202169<br>இறஸ்ஸியன் 202188<br>இறஸ்ஸியன் 203189<br>இறஸ்ஸியன் 203190<br>இறஸ்ஸியன் 112629<br>இறஸ்ஸியன் 112819 | இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபன வள்ளச்சாலை-மட்டக்குளி | 1973.10.22 | காலை 9.30 |
| | | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, மட்டக்களப்பு | | |
| டீசீ 82<br>டீசீ 82<br>டீசீ 82 | பேர்க்கின்ஸ் 33 ப.வ.<br>கொட்டு<br>மீன்பிடி உபகரணம் | மீராவோடை<br>ஒட்டமாவடி<br>ஒட்டமாவடி | 1973.10.22 | காலை 10.00 |
| | | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, புத்தளம் | | |
| ஜீஎபி 57<br>ஜீ எபி 59 | புக் 31 ப. வ.<br>ஷ | மூலதன மீனவர் கூட்டுறவுச் சங்கம், தோடுவாவை<br>ஷ | 1973.10.23 | காலை 9.30 |
| | | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர், அம்பாந்தோட்டை | | |
| டபிள்யூ. எஸ். 48<br>ஔஎஸ் 1 | பேர்க்கின்ஸ் 33 ப. வ<br>யன்மார் | அம்பாந்தோட்டை<br>மீ. கூட்டுறவுச் சங்க அலுவலகம், குராபொக்குன குங்ககமை | 1973.10.26 | மாலை 2.30 |
| | | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் பிரிவு, மாத்தறை | | |
| சீ எப்சீ 33 | புக் 29 ப. வ. | பெலானை; வெலிகமை | 1973.10.23 | காலை 9.30 |

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, 1973.09.25

10–284—12.10.73—ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம்

*வழங்குநர்களைப் பதிவு செய்தல்—புகைவண்டித் திணைக்கள ஹோட்டல்களும் உணவு வழங்கற் சேவையும்*

1974 ஆம் ஆண்டின் பொருட்டு புகைவண்டித் திணைக்கள ஹோட்டல்கள் உணவு வழங்கற் சேவை என்பனவற்றிற்குத் தேவையான பின்வரும் சகல இனங்களையோ அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ வழங்க விரும்புபவர்கள் 73.10.31 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கொழும்பில் கோட்டை புகைவண்டி நிலையத்திலுள்ள புகைவண்டித் திணைக்கள ஹோட்டல்கள் உணவு வழங்கற் சேவை அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தாங்கள் வழங்க விரும்பும் இனங்கள், அவற்றை வழங்கக்கூடிய அண்மையிலுள்ள புகைவண்டி நிலையங்கள், பெயர், விலாசம் ஆகியவை விண்ணப்பங்களில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களும் பதிவுசெய்து கொள்ளுவதற்குத் தகைமையுடையனவாகும். தங்கள் பெயர்களைப் பதிவுசெய்ய விரும்பும் கமக்காரர்கள் அவர்கள் கமக்காரர்கள் என்பதை நிரூபிக்கும் பொருட்டு மாவட்ட அரசிறை உத்தியோகத்தரிடம் அல்லது மாவட்ட கமத்தொழில் விசாலிப்பு உத்தியோகத்தரிடம் அல்லது அப்பிரதேச கிராமசேவகரிடம் இருந்து பெற்ற சான்றிதழ் ஒன்றை அனுப்பிவைத்தல் வேண்டும். பிராந்திய அபிவிருத்திச் சபைகள் அப்பிராந்திய அரசாங்க அதிபரிடமிருந்து அல்லது உதவி அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்ற சான்றிதழ்களை அனுப்பிவைத்தல் வேண்டும். ஏனையவர்கள் தங்கள் தொழில் பதிவுச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அல்லது அவற்றின் புகைப்படவுருவப் படிவங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

செய்தல் மிளகாய்
மிளகு (விதை)
கடுகு (விதை)
கோப்பி (விதை)
கொரக்கா
கறுவாப் பட்டை
புளி
சின்ன வெங்காயம்
மஞ்சள்
எலுமிச்சம் பழம்
உருளைக் கிழக்கு
இஞ்சி
பச்சை மிளகாய்
கொடித் தோடை
அன்னாசி

வாழைப்பழம் (பழுக்காதது)
பப்பாசிப் பழம்
சேம்புக் கிழங்கு
மரவள்ளிக் கிழங்கு
வத்தாளங் கிழங்கு
பாசிப் பயறு
தேங்காய்
எள்ளு/எள்ளுருண்டை
கஜூ பக்கற்
அரிசி மா
காய் கறி
கருவாடு
முட்டை
மாட்டிறைச்சி

மீன்
கடதாசிப் பைகள்
பொலிதீன் சுருள்கள்
அப்பம்
இடியப்பம்
சொக்கிலேட்
விஞக்கிரி
மேசை உப்பு
குடிப்பதற்கான உறிஞ்சும் குழாய் (ஸ்ரோ)
தேயிலை/தூள்
கை துடைக்கும் கடதாசி
பனிக்கட்டி

புகைவண்டித் திணைக்களக்
களஞ்சிய அத்தியட்சகர்.

புகைவண்டித் திணைக்கள ஹோட்டல்கள்
உணவு வழங்கற் சேவை அலுவலகம்,
கோட்டைப் புகைவண்டி நிலையம்,
கொழும்புக் கோட்டை.

10–377—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும்குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | 5.10.73 | வெள்ளி | 25. 9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 3.10.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 10.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 17.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| **நவெம்பர்** | 2.11.73 | வெள்ளி | 24.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 7.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| **திசெம்பர்** | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரீஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.